# மணவாளமாமுனிகளின் வரலாறு

## மணவாளமாமுனிகள் திருவவதாரம்

,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,

ஸ்ரீய பதியாய் பரமகாருணிகளாய் திருவரநுகத்தரவணையிலே உறநுகுவான் போல் யோகு செய்த என்கிறபடியே ஜகத்ரக்ஷணசிந்தாயுக்தானாய்க் கண்வளர்ந்தருளுகிற பெரிய பெருமாள் மீண்டும் தர்சநம் இப்படி ஓராண்வழியாய் வருகிறபடியைக் கண்டு எம்பெருமானாரைப் போலே லோகமெல்லாம் உஜ்ஜீவிக்கும்படி ஒரு விஷயத்தை உண்டாக்குவோம் என்று யோசித்து திருவநந்தாழ்வானையே கடாக்ஷித்து ஜகத்தைத் திருத்தும்படி நியோகித்தருள அவரும் அப்படியே பெரிய பெருமாளுடைய திருவுள்ளத்தை யறிந்தவராய் அதனபடியே சடகோபனுடைய இருப்பிடமான அந்தத் திருநகரியிலே மீண்டும் அவதரித்தருளினார்.

கலியுகம் பிறந்து நாலாயிரத்து நானூற்று எழுபத்தொரு வருஷத்துக்குப் பின்பு ஸாதாரண வருஷம் ஐப்பசி மாஸத்தில் சுக்லபக்ஷத்தில் சதுர்த்தியும் வியாழக்கிழமையுநு கூடின திருமூலத்திலே உபயவிபூதியும் கொந்தளிக்கும்ம குடியையுடையயரான திகழக்கிடந்தான் திருநாவீறுடையபிரான் தாதரண்ணரையருக்கு குமாரராகத் திருவவதரித்தருளினார், திகழக்கிடந்தான் திருநாவீறுடையபிரான் தாதரண்ணர் தம்முடை திருக்குமாரராக வளாந்தருளுகிற பரமயோகீந்த்ரரான அழகிய மணவாளப்பெருமாள் நாயனாருக்குத் திருக்கலயாணமும் செய்வித்து பின்பு அருளிச்செயல்களையும் ரஹஸ்யநுகளையும் தாமேயோதுவித்தருளினார். அவரும் அந்த உபகாரத்துக்கீடுபட்டு எல்லா சாஸ்த்தரநுகளையும் குறையறக் கற்றறிந்தவரான திருநாவீறுடையபிரான் தாதரண்ணரை த்யானிக்கிறேன் என்றும் அநுஸந்தித்தருளினார், பின்பு சிலகாலம்சென்றவாறே அண்ணரும் திருநாட்டுக்கெழுந்தருள அழகிய மணவாளப்பெருமாள் நாயனாரும் அவரை ஸம்ஸ்கரித்துப் பள்ளிபடுத்து திருவத்யயநமும் பெருக்க நடத்தியருளினார்,

## திருமாலையாழ்வார் என்னும் திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளில் ஆச்ரயித்தல

,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,

அநந்தரம் ஆழ்வார்திருநகரியிலே தர்சநப்ரவர்த்தகராயெழுந்தருளியிருக்கிற திருமலையாழ்வாரும் இனி தர்சநப்ரவர்த்தகராவரார் என்று வசாரித்துக்கொண்டு திருவாய்மொழீப்பிள்ளை என்று திருவாய்மொழி ஸம்பந்தத்தையே தமக்கு நிருபகமாகவுடையராய் ஆழ்வார் திருவடிகிளலே கைநுகர்யமே அநவரதமும்செய்து கொண்டு திகழ்கிற திருவாய்மொழிப்பிள்ளையினுடைய திவ்யகடாக்ஷத்திற்கு விஷயமாம்படி அழகியமணவாளப்பெருமாள் நாயனாரும் குருகூர்வளநகர் வந்து திருவாய்மொழிப்பிள்ளை திருத்தாள் சேர்ந்து ஸம்ஸாரபந்தத்தையறுப்பதான எல்லாவருளிச் செயல்களின் தாத்பர்யநுகளையும் கேட்டறிந்தார்,

அநந்தரம் மாமுனிகள் தமக்கு திருவாய்மொழிப்பிள்ளை ப்ராப்யமாக காட்டியருளின உடையவர் திருவடிகிளலே யதிராஜவிம்ஷதி என்னும் க்ரந்தத்தை அருளிச்செய்ய அதற்கு உபகாரமாக திருவாய்மொழிப்பிள்ளையும் திருப்புளியாழ்வாரடியிலே தாம் கண்ட உடையவர் திருமேனி (உற்சவர்) யை ப்ரஸாதித்தருள அதுவே தமக்கு தாரகாதிகளாகச் செய்து கொண்டு போருகிறவர் உடையவர்க்குத் தனிக்கோயில் தொடக்கமான அனைத்தழகுநு கண்டருளப் பண்ணி கோயிலை வளைய ராமாநுஜ சதுர்வேதி மங்கலம் என்கிற திருவீதியையும் உண்டாக்கி அங்கே ராமாநுசனைத்தொழும் பெரியோரையும் குடியமர்த்தி தாமும் நித்ய கைங்கர்யம் பண்ணிக்கொண்டிருந்தார்,

**ஸ்ரீபாஷ்யம் ஸாதித்தல்**

**....................................................,**

அழகியமணவாளர் யதிராஜரின் அவதாரஸ்தலமான ஸ்ரீபெரும்பூதரையடைந்து ஊரிலுள்ள சிறப்புகளை கண்டு களித்துக் கொண்டு சென்று இளையாழ்வாரை ஸேவித்து ஸ்ரீபாஷ்யத்துக்கு அநுமதி கொண்டு அநந்தரம் கோயிலிலே யெழுந்தருளியிருக்க ராத்ரி ஸ்வப்நத்திலே எம்பெருமானாரெழுந்தருளி நாயனாரை அழைத்தருளி ஸ்ரீபாஷ்யஸ்ரீகோசத்தை ஸாதித்து நாமே உமக்குப் பெருமாள் கோயிலிலே ஸ்ரீபாஷ்யம் ஸாதிக்கிறோம் என்றார்,
ஓராண்டு காலம் யதோத்காரி ஸந்நிதியில் ஸ்ரீபாஷ்யமும் பகவத்விஷயமும் ஸாதித்தருளினதாகவும் அது காரணமாகவே அந்த ஸந்நிதியில் மணவாளமாமுனிகள் அர்ச்சையில் உபதேச ஹஸ்த முத்ரையுடன் ஸேவை ஸாதிப்பது.

**ஸந்யாஸாச்ரமம் ஸ்வீகரித்தல்**

**...................................................................**

அக்காலத்தில் பெருமாளுடைய ஸேவைக்கு விரோதியாக ''சீதகம் தீட்டு தெற்கினின்றும் சிலர் வந்து விண்ணப்பம் செய்ய கேட்டருளி தேவரீருடைய திருக்கமலபாதங்களில் ஈடுபட்டுள்ள மனமுடையவனுக்கு எல்லாம் பகவதநுபவ விரோதிகளாகவே ஆகின்றன எனவே பகவத்கைங்கர்யத்துக்கு உள்ள விரோதிகளெல்லாம் அநுகூலமாக யிருக்கின்றன என்ற அறுதியிட்டு அப்போதே தமக்கு ஸந்யாஸாச்ரமம் தந்தருளவேண்டும் என்று ப்ராத்திக்க.
த்ரிதண்டகாஷாயங்களை ஸாதித்தருளி சடகோப ஜீயர் என்று பிள்ளை திருநாமத்தையுடையராய். உமக்கு பல்லவராயன் மடத்தை ப்ரஸாதிக்கிறோம் எம்பெருமானாரைப் போலே இங்கே இரும் என்று நியமித்தருளி நம்முடைய அழகிய மணவாள ஜீயரை மடத்திலே விட்டு வாருங்கோள் என்று உத்தம நம்பி முதலான அனைத்துப் பரிகாரத்தையும் இவர் பின்னே அனுப்பியருள4 அவர்களும் அப்படியே ஸேவித்துக் கொண்டுபோய் மடத்திலே யெழுந்தருளப்பண்ணி அடியார்கள் வாழ அரங்க நகர்வாழ ............ மணவாள மாமுனியே இன்னுமொரு நூற்றாண்டிரும் என்று ஸேவித்து மீண்டார்கள்,

பின்பு மடம் முழுவதையும் வானமாமலை ஜீயர் முதலான முதலிகளைக் கொண்டு செப்பமிட்டு திருமலையாழ்வார் என்று திருவாய்மொழிப்பிள்ளை பெயராலே ஒரு வியாக்கியான மண்டபத்தையு முண்டாக்கி

பிள்ளைலோகாசாரியார் திருமாளிகையிலிருந்து ரஹஸ்யம் விளைந்த மண்ணால் தாம் எழுந்தருளியிருக்கிற இடத்திற்கு மண்காப்புச் சாத்துவித்து அவ்விடத்தில் வியாக்யானித்துக் கொண்டெழுந்தருளியிருந்தார்,

ஆகாரத்தினாலும் ஆசாரம் ஞாநம் வைராக்யம் இவற்றினாலும் எம்பெருமானாரைப் போலவே இந்த மணவாளமாமுனிகளும் உள்ளமையால் ஸ்ரீமானான அந்த ராமாநுஜமுனிவரே இவர் என்று ஜனங்கள் பரஸ்பரம் புகழ்ந்து பேசினர். இவர் எம்பெருமானார் அவதாரம் என்று அறுதியிட்டு இவர் திருவடிகளிலே ஆஷ்ரயித்தார்கள்.

திருப்பேரன்கள் அவதாரம்

ஜுயர் தர்ஷநம் நிர்விஹிக்கிற காலத்திலே ஜீயருடைய பூர்வாச்ரமத்தில் குமரரான நம்மையனிராமானுசன் திருநகரியிலே வளர்ந்தருளி அந்கே திருக்கலயாணம் செய்தருளி சிலகாலத்துக்குமேல் அவருக்குக் குமாரர் திருவவதரிக்க அவருக்கு அழகியமணவாளப் பெருமாள் நாயனார் என்று ஜுயர் திருநாமம் சாத்தியருளினார். பின்பு அவர் ஸ்ரீவில்லிபுத்துாரிலே யெழுந்தருளியிருக்க பின்னுமொரு குமாரர் திருவவதரிக்க, அவருக்குத்திருநாமமே தென்று ஜுயர் ஸந்நிதியிலே கேட்டு வரக்காட்ட ஸ்ரீவில்லிபுத்துாரிலே பிறந்த பிள்ளைக்கு பெயரேதென்று கேட்டுவர விடுவதென்। பெரியாழ்வார் திருநாமம் சாத்துந்கோள் என்று அருளிச்செய்து போகவிட அப்படியே பெரியாழ்வாரையன் என்று திருநாமம்சாத்தியருளினார். இவ்விருவரில் அழகிய மணவாளப்பெருமாள நாயனார் ஜுயர் திருவடிகளைப் பிரியாது ஆட்செய்து ஸேவித்திருந்தார்.

**திருநாராயணபுரத்தாயிடம் ஸமாகமம்**
**.................................................................................**

ஆசார்யஹ்ருதயத்திற்குப் பொருள் அருளிச் செய்யும்போது "ஞாநசதுர்த்திகளின் மேலேயிறே ஆநந்தஷஷ்டிகளுக்குதயம் " என்கிற வாக்கியத்திற்கு அர்த்தம் கிடைக்காமையாலே இதற்கு அர்த்தமருளிச் செயவாராரென்று விசாரமுண்டாய் திருநாராயணபுரத்தாயி பக்கலிலே இவ்வர்த்தம் கேட்க வேண்டுமென்ற பேராசையோடே ஆழ்வாருக்கு விண்ணப்பம் செய்து அவரநுமதி கொண்டு திருநாராயணபுரத்துப் போவோமென்று புறப்பட்டெழுந்தருளாநிற்க ஆயியும் ஜுயருடைய ப்ரபாவநு கேட்டு இவரை ஸேவிப்பதாகத்திருநகரிக்கு வர அவரைக்கண்டு எண்ணின பலம் எதிரிலே வரப்பெறுவதே என்று பெரிப்ரீதியோடே தீர்க்கப்ரணாமம் பண்ணி நிற்க ஆயியும் தாளுந்தடக்கையும் கூப்பிஸேவிக்க இருவரும் அந்யோந்யம் வந்தநபரராய் குசலப்ரஷநம் பண்ணிநிற்க இத்தைக் கண்டு ஜுயர் ஸ்ரீபாதத்து முதலிகளெல்லாரும் பெரிய நம்பியும் எம்பெருமானாரும் எதிர்ப்பட்டாப்போலேயாயிற்று என்று மிகவும் உகந்தருளினார்கள், அநந்தரம் குன்ற மாடத்திருக்குருகூரேற எழுந்தருளி ஆயிபக்கலிலே ஆசார்யஹ்ருதய ரஹஸ்யார்த்தநுகளையெல்லாம் கேட்டருளினார்,

*ஜீயர் மடம் தீக்கிறையாதல்*

.............................................................................

*இப்படி பெரிய ஜீயர் ஜநாநஸம்ருத்தியுடனே திருநகரியிலே வாழ்ந்தருளுநுகாலத்திலே இத்தைக்கண்டு ஸஹிக்க மாட்டாத சில பொறுமையாளர்கள் கூரை மேய்ச்சலாயிருக்கிற மடத்திலே ஜீயர் எழுந்தருளியிருக்க அர்த்தராத்ரியிலே அக்நீபரக்ஷேபணம் தீயை வைக்க அத்தசையிலே ஜீயர் தம்முடைய ப்ரபாவத்தாலே அவ்வழல் தட்டாதபடி சேஷாக்ருதியாய்க்கொண்டு அனைவருநுகாணப்புறப்பட்டு மடம் வேகிறபடியைக் கண்டு சோகித்திருக்க முதலிகள்திரளிலே வந்து புகுந்து நிற்க இந்த அற்புதத்தை முதலிகளெல்லாருநுகண்டு மிகவும் சந்தோஷித்திருந்தார்கள்,*

**நம்பெருமாள் ஜீயரை பகவத்விஷயகாலக்ஷேபம் ஸாதிக்க நியமித்தல்**

**...........................................................................................................................................................**

*தேவரீர் நமது ஸந்நிதியில் திருவாய்மொழி ஸ்ரீ ஸூக்திகளின் அறிவரிய விசேஷார்த்தநுகளை உபந்யஸித்துக் கொண்டு வாரீர் என்று நியமித்தருளினார், மாமுனிகள் அவருடைய உத்தரவை பெரிய அநுக்ரஹமென்று சிரஸாவஹித்து அப்படியே அநுகு அந்தக்ஷணத்திலேயே உபந்யஸிக்கத் தொடநுகினார், ச்ரிய பதியானஸ்ரீரநுகநாதர் பெரிதாய் அழகிய பெரிய திருமண்டபத்தில் தாம் நம்மாழ்வார் முதலான திவ்யஜ் ஈநம்படைத்த ஆசார்யர்களுடன் எழுந்தருளியிருந்து அந்தத் திருவாய்மொழிக்கு அம்மணவாள மாமுனிகளாலேயே தெளிவாக அருளிச் செய்யப்பட்ட உண்மைப் பொருள்களைக் கேட்டருளி மகிழ்ந்தார், பின்பு குழுந்தைகள் இடையர் தொடக்கமான சாதாரண ஜனநுகள் முதலாக எல்லோரும் அந்த உயர்ந்த முனிவரான மணவாள மாமுனிகளின் அமானுஷமான வைபவத்தை அனுபவித்துத் தம்மை அவரிடத்திலேயே ஸமர்ப்பித்துத் தம்மை மிகவும் பாக்யசாலிகளாக நினைத்தார்கள்,*

*ஸ்ரீஷைலேஷதயாபாத்ர தனியனவதாரம்*

..................................................................................................................

*அழகிய மணவாளபட்டரான அர்ச்சககுமாரராய் ஐந்தாம் வயதாய் ரநுகநாயகமென்கிற திருநாமத்தையுடையரான சிறுபிள்ளை ஸம்பாவனைத் தட்டுக்களுக்கும் பெருமாளுக்கும் நடுவே வந்து நிற்க அப்பாலே விடவிடத்திரும்பி வந்து நிற்க இது வெறுமனன்று ஒரு ஆஷ்சர்யமுண்டாக வேண்டும் என்று எல்லாரும் பார்த்திருந்து சிறு பிள்ளையை நீர் நிற்கிற காரியமேதென்ன அவர் கையைக்கூப்பிக் கொண்டு பயப்படாமல் ஸ்ரீஷைலேஷதயாபாத்ரம் என்ன பின்னுமேதென்ன தீபக்த்யாதிகுணார்ணவம் யதீந்தரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் என்று சொல்லி ஓடிப்போக பெரியோர்களெல்லாம் ஆஷ்சர்யப்பட்டு இந்த ச்லோகத்தைப் பட்டோலை கொண்டு* மஞ்சட் காப்பு *சாத்தித் திருவடிகளிலே ஸமர்ப்பித்து பின்பு அத்தைத் தட்டிலே வைத்து ரநுகநாயகத்தை உபலாளித் தழைத்து இன்னமேதென்ன நானொன்றுமறியேனென்ன முன்பு சொன்னத்தை இன்னமொறுமுறை சொல்லுமென்ன நானென்றுமறியேனென்று ஓடி விட பின்பு அந்தப் பிள்ளைக்கு அருள்பாடு ஸாதித்து நீர் வாழித்திருநாமமோதுமென்ன அவர் தமிழிலே*

வாழும் மணவாளமாமுனிவன் - வாழியவன்
மாறன் திருவாய்மொழிப்பொருளை மாநிலத்தோர்
தேறும்படியுரைக்கும் சீர் என்றும்

செய்யதாமரைத் தாளினை வாழியே
சேலைவாழி திருநாபி வாழியே
துய்யமார்பும் புரிநூலும் வாழியே
சுந்தரத்திருதோளிணை வாழியே
கையுமேந்திய முக்கோலும் வாழியே
கருணைபொங்கிய கண்ணிணை வாழியே
பொய்யிலாத மணவாளமாமுனி புந்திவாழி புகழ்வாழி வாழியே
என்றும்

அடியார்கள் வாழ அரங்கநகர் வாழ
சடகோபன் தண்டமிழ்நூல் வாழ கடல் சூழ்ந்த
மன்னுலகம் வாழ மணவாள மாமுனியே।
இன்னுமொரு நூற்றாண்டிரும்

என்றும் ஓத பெருமாளுகந்தருளி அவரை க்ருபை பண்ணியருளி வரிசைகளும் ப்ரஸாதித்து,

உடனே திருமலை பெருமாள்கோயில் தொடக்கமான திருப்பதிகளுக்கெல்லாம் ஸ்ரீ சேனை முதலியாருடைய ஸ்ரீமுகமாக அநுஸந்தான காலங்கள் தோறும் ஜுயர் விஷயமாக நம்பெருமாளருளிச்செய்த தனியன்

ஸ்ரீஷைலேஷதயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம்முநிம்

என்று அநுஸந்திந்துத் தொடங்கவும் ப்ரபந்தம் சாத்தி வாழி திருவாய்மொழிப்பிள்ளை என்று தொடங்கி மணவாளமாமுனியே இன்னமொரு நூற்றுண்டிரும் என்று அநுஸந்தித்துத் தலைக்கட்டவும் என்று அனுப்பிவிட்டருளி ஜுயருக்கு ஸம்பாவனையும் செய்தருளி வரிசையுடன் மடத்திற்கு அனுப்பியருளினார்,

ஆஷ்டதிக்கஜங்கள்
..............................................

பாராருமங்கை திருவேங்கடமுனி பட்டர்பிரான்
ஆராமம் சூழ்கோயில் கந்தாடையண்ணன் எறும்பியப்பா
ஏராருமப்பிள்ளை அப்பிள்ளார் வாதிபயங்கரரென்
பேரார்ந்த திக்கயங்சூழ் வரயோகியைச் சிந்தியுமே

என்று சொல்லப்பட்ட வானமாமலை ஜீயர் திருவேங்கட ஜீயர் பட்டர்பிரான் ஜீயர் கந்தாடையண்ணன் எறும்பியப்பா அப்பிள்ளை அப்பிள்ளார் ப்ரதிவாதிபயங்கரமண்ணா என்கிற அஷ்டதிக்கஜங்களை நியமித்தார்,

**பெரிய ஜீயர் சரமதசையில் நாராயிரம் கேட்டருளியது**

.....................................................................................................

ஜீயர் தனது சரமதசையில் முதலிகளைப்பார்த்து நாலாயிரம் தொடங்கி நடத்துங்கோள் என்று நாயனார் தொடக்கமான முதலிகளுக்கு நியமித்தருள அவர்களுமப்படியே தொடங்கி அநுஸந்திக்க இவைகளையெல்லாம் திருச்செவிசாத்தியருளி ஜீயரும் உகப்புடனே வளர்த்ததனால் பயன் பெற்றேன் என்றருளிச் செய்து அவர்களைக் குறித்து பெரியபெருமாளுடைய ஸ்ரீகார்யத்தைக் குறைவறநடத்திக் கொண்டும் ஸ்ரீவைஷ்ணவர்களை போகவிட்டு திருவாராதநம் ஸ்ரீ கோசங்கள் மற்றுமுண்டான உபகரணங்கள் மடம் முதலான எல்லாவற்றையும் நம்பெருமாளுக்கு சேஷமாக்கி ஸமர்ப்பித்து ஸ்ரீவைஷ்ணவர்களை அமுது செய்வித்து அவர்கள் தீர்த்தமும் ஸ்வீகரித்து அபராதக்ஷாமணம் பண்ணிக்கொண்டு எழுந்துருளியிருக்க பிள்ளை திருவடிகளே சரணம் -- வாழி உலகாசிரியன் என்று அநுஸந்தித்துப் பிள்ளையை த்யாநித்துக்கொண்டு அவசரமாக அணையிலே சாய்ந்தருள ஸ்ரீ பாதத்து முதலிகளெல்லாரும் கைகூப்பிக்கொண்டு ப்ரஹ்மவல்லி ப்ருகுவல்லி சூழ்விசும்பணிமுகில் அர்ச்சராதி நூற்றந்தாதி இவைகளை அநுஸந்திப்பாராய் பெரிய ஆரவாரத்துடனே செல்லுகிறவளவிலே "அங்கயல்பாய்வயல்தென்னரங்கன் " என்ற பாசுரத்தை ஸ்ரீவைஷ்ணவர்கள் அநுஸந்திக்கக் கேட்டு தாமும் க்ருதா ஜலிபுடராய் " எம்பெருமனார் திருவடிகளே சரணம் " என்று அநுஸந்தித்து திருக்கண்களைச் செம்பளித்துக் கொண்டிருக்க ஜீயர் திருநாட்டுக்கெழுந்தருளினார்.

ஜீயருக்கு சரம கைங்கர்யங்கள்

......................................................................................

அநந்தரம் ஜீயருக்கு சரமகைங்கர்யங்களைச் செய்வதாக முதலிகளெல்லாரையுங்கூட்டிக் கொண்டு ஜீயர் நாயனார் திருக்காவேரிக்கெழுந்தருளி நீராடி அலங்காரத் திருமஞ்சனங்கொண்டு வந்தருளி ஜீயரைத் திருமஞ்சநம் கொண்டருளப்பண்வதாக ஒரு திருமஞ்சநவேதிகையிலே விமலசரம விக்ரஹத்தை யேறியருளப் பண்ணி புருஷஸூக்தாநுஸந்தத்தாலும் த்வயாநுஸந்தாநத்தாலும் மற்றுமுண்டான அதுஸந்தத்தாலும் திருமஞ்சநநு கொண்டருளப்பண்ணி திருவொற்றுவாடை சாத்தி திருப்பரியட்டஞ்சாத்தி அலங்கரித்து விசாலமான திருநெற்றியில் மிகவிளங்கும் திருமண்காப்புடையவர் என்கிறபடியே த்வாதசோர் தவபுண்டரங்களையும் தரிப்பித்து தச்சேஷமான திருமண் ஸ்ரீசூர்ணங்களையெல்லாம் தங்களுக்கு ஆபத்தநமாகச்சேர்த்துவைத்துக்கொண்டு ஜீயரை திவ்யஸிம்ஹாஸநத்திலே ஏறியருளப்பண்ணி அவர் திருவடிகளைக் கண்ணிலும் நெஞ்சிலும் ஒற்றிக்கொண்டு திவ்யமங்கள விக்ரஹத்தைத்தம் தம் திருவுள்ளங்களிலே தேக்கிக் கொண்டு வைத்தகண்வாங்காதே " தர்சநத்திலே

மணவாளமாமுனிகள் திருநாட்டுக் கெழுந்தருளினார் ” என்று ஒற்றைத் திருச்சின்னம் பணிமாற ஸுமங்கலிகள் தீபமெடுக்க திருவீதிகளில் அநுகுண்டானவர்களெல்லாம் ஸேவிக்க எழுந்தருளப்பண்ணிஞர்கள்,

பூதேவியானவள் முன்பு ஜனகராஜன் திருமகளை மடியிலே வைத்து அணைத்துக் கொண்டு ஆதிரித்தாற்போலே அந்தமண்மகளான பிராட்டியும் மணவாளமாமுனியான இவரையும் மடியிலே எழுந்தருளப்பண்ணிவைத்துக் கொண்டு மகிழ ஆளவந்தார் எம்பெருமானாரைப் போலே யதிஸம்ஸ்காரவிதியடநுஞ்ச் செய்து கனித்துவாழும்படி திருப்பள்ளிப்படுத்தினார்கள்,